**2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 14.4.2026 அன்று, பத்மநாபபுரம், நாகர்கோவில், அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு :**





● பத்மநாபபுரம் தக்கலை வட்டாட்சியர் அலுவலகம் பகுதியில், குளச்சல் சட்டமன்றத் தொகுதியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் தாரகை கத்பர்ட், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டி.டி. பிரவீன், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஆர்.செல்லசுவாமி, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் செ.ராஜேஷ்குமார் ஆகியோரை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டார்.




● நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் ஜங்ஷன் பகுதியில், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் ரெ.மகேஷ், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் எஸ். ஆஸ்டின் ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.




● அம்பாசமுத்திரம் கல்யாணி திரையரங்கம் பகுதியில், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் வி.பி.துரை அவர்களுக்கு கை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.




● பாளையங்கோட்டை ஜவகர் மைதானம் மார்க்கெட் பகுதியில், பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் மு.அப்துல் வஹாப் அவர்களை ஆதரித்து பரப்புரை செய்தார்.




● திருநெல்வேலி வாகையடி முனை பகுதியில், திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், சு.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டார்.